ஆகையால் கடிதத்தின் சாரத்தையாவது படித்துக் காட்டினால்கூட, மேலவைக்கு அது உபயோகமாக இருக்குமென்பதால் அமைச்சர் அவர்கள் அதைச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொது நலனுக்கு ஒவ்வாதது என்பதால் வெளியிடவில்லை என்று கூறினேன். எனக்குத் தெரியாமலேயே என்னிடமிருந்து அந்த விஷயத்தை வாங்குகிற முயற்சியில் உறுப்பினர் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று கருதுகிறேன். டைம் காப்ஸூலைப் பற்றிச் சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அதுபோன்ற காரியங்களைச் செய்வார்கள். ஒருவேளை நீங்கள் வர முடிந்தால், அந்தக் காரியத்தைச் செய்யலாம்.

திரு. ஜார்ஜ் கோமகன் : பிரதமர் தேசாய் அவர்கள் எந்த மாநிலத்தின் மீதும் அவ்வாறு மொழித் திணிப்பு இல்லை என்று சொல்லியது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களை அப்படிச் சொல்ல வைத்துக் கொண்டிருப்பதே இந்த அரசுதான்.

Teachers Provident Fund.

* 159 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of Thiru P. R. THOMAS) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that teachers serving in Government Schools are eligible to withdraw up to a maximum of 70 per cent of the amount standing to their credit in the Teachers Provident Fund Account, as loans; and

(*b*) if so, whether this privilege will also be extended to the teachers serving in Aided Schools ?

ஆசிரியர்கள் வருங்கால வைப்பு நிதி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. பி. ஆர். தாமஸ் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் அவர்கள் பேரில் உள்ள தொகையிலிருந்து உயர்வாக 70 சதவீதம் வரை கடன் வாங்குவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா ?

1978 மார்ச் 1]

(இ) ஆமெனில், அரசு மானியம் பெறும் தனியார் பள்ளிகளில், பணி யாற்றும் ஆசிரியர்களுக்கும் இச்சிறப்புரிமை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

(முற்பகல் 10-50)

திரு. கே. எஸ். கணபதி : புதிதாக வெளியிடப்பட்டுள்ள அரசு உத்தரவின் படி, அரசு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதியிலிருந்து, கடன்களைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றார்கள். யாருக்காவது காது குத்தினால் இந்த நிதியிலிருந்து கடன் பெறலாம் என்று இருப்பதால், அவர்கள் யாருக்காவது காது குத்த வேண்டியிருக்கிறது. முன்பு இருந்ததைப்போல அதிலிருந்து சுலபமாகக் கடன்களைப் பெறுவதற்கான வழி முறைகளை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றிய கருத்துக்கள் தக்க நேரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எம். சங்காலிங்கம் : இந்த நிதியிலிருந்து அரசு ஊழியர்கள் தங்களுக்கு வேண்டிய கடன்களைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகளை அரசு இப்போது விதித்திருக்கின்றது. முன்பெல்லாம் மனைவியோ குழந்தையோ நோய்வாய்ப்பட்டிருந்தால், அதிலிருந்து ஓரளவிற்குக் கடன் பெறலாம். ஆனால் இப்போது அப்படி ஏதாவது கடன்களைக் கேட்டுப் பெற வேண்டுமென்றால், மருத்துவச் சான்றுகள், மருந்துகளை வாங்குவதற்கு எவ்வளவு ஆகும் என்பது போன்றவற்றுக்குச் சான்றிதழ்கள் ஆகியவற்றை முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. இப்படிப்பட்ட விதிகளினால் அரசு ஊழியர்கள் பெருந்தொல்லைக்குள்ளாயிருக்கின்றார்கள். எனவே இவற்றைத் தளர்த்தி முந்தைய நிலையை மீண்டும் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுகிறோம். இந்த நிதியே வருங்கால சேமிப்பு நிதி. அதனுடைய தன்மையையே அடியோடு இழந்துவிடத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று உறுப்பினர்களும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

திரு. எம். சங்கரலிங்கம் : அவர்கள் இருந்தால்தானே அவர்களுக்கு வரும் காலம் என்று இருக்கப்போகிறது ? அவர்களுடைய வைத்தியச் செலவிற்காகத் தான் சில சமயங்களிலே கடன்தொகை வேண்டும் என்கிறார்கள். அந்த விதத்தில் முன்பு இருந்த விதிகள் போதுமானவையாக இருந்தன. இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் கடுமையானதாக இருக்கின்றன. எனவே அவற்றைப் பரிசீலித்துத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நான் கருத்தில் கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : இந்த சேமிப்பு நிதி என்பது 'கிராசுவிடி' கொடுப்பது என்ற முறை வருவதற்கு முன்பு இருந்த ஒன்று. இப்போதும் அந்த சேமிப்பு நிதி முறையை வைத்திருக்கிறோம். ஆனால் கிராசுவிடி கொடுப்பது என்பது வந்த பிறகு இந்த சேமிப்பு நிதியின் முக்கியத்துவம் வெகுவாகக் குறைந்துவிட்டது. அந்த நிலையில், அரசு ஊழியர்கள் இந்த சேமிப்பு நிதியிலிருந்து தங்களுக்கு வேண்டிய கடன் வசதிகளைப் பெற வேண்டிய வழி முறைகளை எளிதாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வருங்கால சேமிப்பு நிதியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது என்ற கருத்துக்கு அரசு வரவில்லை.

Privately Run Nursery Schools.

*160 Q.—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal with the Government to regulate the privately run nursery schools in the State;

(b) if so, the details thereof ;

(c) the reason therefor; and

(d) when the regulations are proposed to be implemented?